20. (அ) தலையங்கம் எழுதுவது எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

(ஆ) கழிவுநீர் மாசு அகற்றுதல் - விவரிக்க.

பகுதி ஈ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

<u>கட்டுரை</u> வடிவில் விடை தருக.

21. (அ) பாரதியின் கடவுட் கொள்கைளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பாவேந்தரது இயற்கையைப் புனையும் திறத்தினைக் குடும்பவிளக்கின் வழி விவரிக்க.

22. (அ) ஆசியஜோதியின் இலக்கிய நயம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மு. மேத்தாவின் கவிதைகளை மதிப்பீடு செய்க.

23. (அ) ஜெயகாந்தனது பெண்ணியச் சிந்தனைகளை சுந்தரகாண்டம் நாவல் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பத்திரிகைச் சட்டங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

---





தாள் 1 — இக்கால இலக்கியம்

---

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

<u>அனைத்திற்கும் ஒரு சொல்/</u>தொடரில் விடை தருக.

1. பாரதி காலனை எவ்வாறு மிதித்தார்?

2. குடும்ப விளக்கின் ஐந்தாம் பகுதியாக அமைவது எது?

3. ஆசிய ஜோதியின் ஆங்கில மூல நூலினைக் குறிப்பிடுக.

4. மு.மேத்தா அரளிப்பூ என யாரைக் குறிப்பிடுகின்றார்?

5. புரட்சிக்கவியில் இடம்பெறும் கதைத் தலைவன், தலைவி யார்?

6. சுந்தரி பத்திரிகையின் ஆசிரியர் யார்?

7. கணையாழியின் கனவு-தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதைகள் எத்தனை?

8. ஐந்து ‘எ’ க்கள் எவை?

9. மறைந்து/குறைந்து வரும் விலங்கு ஒன்றினைக் குறிப்பிடுக.

10. காடுகளை அழித்து, தேயிலை பயிரிடுவதால் ஏற்படும் விளைவு ஒன்றினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 3 = 15$ மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் ஒரு பத்தி அளவில் விடை தருக.

11. (அ) 'அறிவே தெய்வம்' எனும் பாரதியின் கூற்றினை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாமன் மாமி குடும்பவிளக்கில் மகிழ்ந்து கூறியன யாவை?

12. (அ) சித்தார்த்தர் பறவைக்கு அளித்த சிகிச்சை யாது?

(அல்லது)

(ஆ) தைப்பாவையின் அகப்பொருள் கூறுகள் யாவை?

13. (அ) மு.மேத்தாவின் அறிமுகக்கவிதை தரும் செய்தி யாது?

(அல்லது)

(ஆ) அரசன் உதாரன், அமுதவல்லி ஆகியோருக்கு வழங்கிய தண்டனை குறித்து எழுதுக.

14. (அ) சந்திரமதி சிறுகதையின் கதைப்பின்னல் யாது?

(அல்லது)

(ஆ) சுந்தரக்காண்டம் நாவலின் தொடக்கம் யாது?

15. (அ) இதழ்களின் நோக்கம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செந்நோபில் அணுஉலை வெடிப்பு குறித்து எழுதுக.



பகுதி இ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

16. (அ) பாரதியின் 'கற்பனையூர்' குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்கல்வியின் தேவை குறித்துப் பாவேந்தர் கூறுவன யாவை?

17. (அ) புத்தருக்கும் மகனிழந்த தாய்க்கும் இடையே நிகழ்ந்த உரையாடலைத் தருக.

(அல்லது)

(ஆ) தைப்பாவையின் தனிச்சிறப்புக்களை எடுத்துரைக்க.

18. (அ) மேத்தாவின் இயற்கை பற்றிய கவிதைகள் உணர்த்துவன யாவை?

(அல்லது)

(ஆ) உதாரன், அமுதவல்லி சந்தித்த சூழலை விளக்குக.

19. (அ) காரிருளில் ஒரு மின்னல் சிறுகதையின் கதைச் சுருக்கம் தருக.

(அல்லது)

(ஆ) சுந்தரகாண்டம் புதினத்தில் இடம்பெற்றுள்ள கிளைக் கதைகள் குறித்து எழுதுக.